## தலைப்பு 241 - பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகிரங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைவழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார்ஜயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) நிதி உடைமைக்கூற்று (Statement of Financial Possession)

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 01 இல் உள்ளபடியான மீளாய்வாண்டிற்கான நிதியல்லாச் சொத்துக்கள் அறிக்கையின் ஆரம்ப மீதி ரூபா 17,262,313.94 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அறிக்கையின் நகர்வின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மீதி ரூபா 43,789,809 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதேபோல், 2018 சனவரி 01 இல் உள்ளபடியான புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டத்தினால் உருவாக்கப்பட்ட சொத்து அறிக்கையின் மீதி ரூபா 35,076,457 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | பெறுமதிகள் ஒன்றுக்கொண்டு ஒப்பீடு செய்யப்பட்டு ஏதேனும் வித்தியாசங்கள் காணப்படுமானால், காரணங்கள் எண்ணியல் ரீதியில் விபரிக்கப்படல் வேண்டும். | 2004.01.01 இற்குப் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட அந்த சொத்துக்கள் மாத்திரம் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்படல் வேண்டும். திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களும் புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டியதிலிருந்து, ஒதுக்கீட்டுக் கணக்கு மீதி மற்றும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மீதிகளுக்கிடையே வித்தியாசங்கள் காணப்படக்கூடும்.<br><br>2015 ஆம் ஆண்டில் நிலையான சொத்து விலைமதிப்பு குழுவொன்றினால் வழங்கப்பட்ட விலைமதிப்பின் பிரகாரம் ஆரம்ப மீதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.<br><br>2018.12.31 இல் உள்ளபடியான சரிப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் மீதிகூட பொதுக் கணக்குகள் திணைக்களத்தினால் |

வழங்கப்பட்ட அறிக்கையின் இறுதி மீதியின் பிரகாரம் சரிப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.6.2 முற்பணக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 05 வருடங்களினை விடவும் அதிகமாக நிலுவையாக இரண்டு உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 408,304 கடன் மீதிகள் காணப்பட்டன. | அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய தொகைகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சேவையை விட்டுச் சென்றமை மற்றும் வெளிநாடு சென்றமை காரணமாக விலாசங்களினை கண்டுபிடிக்க முடியாததினால் ரூபா 75,845 தொகையொன்றுடன் தொடர்புடைய கோவைகளினை மூடுவதற்கு 2017.09.18 இல் சட்டமா அதிபதி திணைக்களம் அறிவித்திருந்தது. இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 332,459 கடன் மீதியினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | |
| --- | --- | --- | --- |
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ii ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | நிரந்தரமான நியமனமொன்று மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக தீர்வொன்றாக மாத்திரம் பதில் கடமை நியமனமொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். பதவியொன்றுக்கு முழுநேர உத்தியோகத்த ரொருவரின் சேவை தேவைப்படுமாகவிருந்தால் நிரந்தர நியமனம் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். முழுநேர உத்தியோகத்தரொருவரின் சேவை | தாபன விதிக்கோவையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | பதவியில் சேவையாற்றிய உத்தியொகத்தரின் ஓய்வின் பின்னர் பதில்கடமை பதவிக்கு கணக்காளர் சேவையின் மிகவும் சிரேஷ்டத்துவம் வாய்ந்த உத்தியோகத்தரை நியமிப்பதற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருந்தது.<br><br>பதவிக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேவைப்படாதிருந்த போதிலும், 13.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்ததுடன், 2017 சனவரி 19 இல் இருந்து பணிப்பாளராக சேவையாற்றிய உத்தியோகத்தரொருவர்க்கு மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பதில் கடமை நியமனம் அளிக்கப்பட்டிருந்தது. | | நிரந்தரமான உத்தியோகத்தராக நியமிப்பதற்கான வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும், உத்தியோகத்தரொருவர் இதுவரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிராத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.<br>• பணியில் அமர்த்தப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஊழியர்களுக்கான வருடாந்த செயலாற்ற உடன்படிக்கைகளினை கைச்சாத்திட்டிருக்காமை<br>• ஒட்டுமொத்த பணியாளர்களுக்காகவும் குறிப்பாக ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தொடர்பில் காணப்படும் ஆற்றல் மற்றும் கடமைகளின் வெற்றிக்காக கட்டாயம் காணப்பட வேண்டிய ஆற்றல்களுக்கிடையிலான திறன்கள் இடைவெளியினை இணங்காண்பதற்கான முறையான முறைமையின் பற்றாக்குறை<br>• ஆற்றல்கள் இடைவெளியை இழிவளவாக்குவதற்கு நிறுவகரீதியான எவ்வித திடமான | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | நீங்கள் வழங்கிய அறிலுறுத்தல்களின் பிரகாரம், திறன்கள் இடைவெளியினை குறைப்பதற்கு எமது திணைக்களத்திற்கான பொருத்தமான மனிதவள திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |

மனித வள அபிவிருத்தி திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

- ஒவ்வொரு ஊழியர் உறுப்பினர்களும் மனித வள அபிவிருத்தி திட்டத்தில் காணப்படும் அதிகுறைந்த 12 மணித்தியாலங்கள் பயிற்சி சந்தர்ப்பமொன்றை உறுதிப்படுத்த வேண்டும். திணைக்களம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 70 ஊழியர் உறுப்பினர்களினை கொண்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது 61 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற 43 ஊழியர் உறுப்பினர்களுக்கு மாத்திரம் வெளிநாட்டுப் பயிற்சி சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) விதிப்பனவு** | | |
| (i) 06 நிறுவனங்களின் மதிப்பிடப்பட்ட விதிப்பனவுடன் தொடர்புடைய உள்ளபடியான வருமானத்தில் குறைவு 55 தொடக்கம் 93 சதவீதம் வரையான | சாத்தியப்படக் கூடியவாறான வகையில் துல்லியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | இலங்கை மத்திய வங்கியால் கட்டளையிடப்பட்ட BASEL iii இன் பிரகாரம் அதிகுறைந்த மூலதனத் தேவைப்பாடுகளினை பேணுவதனை நோக்கியதாக நடவடிக்கை எடுப்பது இன்றியமையாததாகக் காணப்பட்டமை காரணமாக, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி |

| | | | |
|---|---|---|---|
| | வீச்சில் காணப்பட்டது. | | போன்ற நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பினை அடைந்து கொள்ள முடியாது காணப்பட்டது.<br><br>அண்ணளவாக ரூபா 25 மில்லியன் பங்களிப்பொன்று தேசிய இரத்தினக்கற்கள் மற்றம் ஆபரண அதிகாரசபையின் மதிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு வருமானம் குறைவடைந்தமை தொடர்பில் அளிக்கப்பட்டிருந்தது.<br><br>இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதி சபையின் பணிப்பாளர் சபையினை நியமிப்பதில் தாமதம் காரணமாக, அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமை காரணமாக மதிப்பிடப்பட்ட இலாப வருமானத்திலிருந்து அண்ணளவாக ரூபா 15 மில்லியனொன்று பெறமுடியுமாகவிருந்தது.<br><br>நீதிமன்றக் கட்டளைகள் பெறப்படும் வரை பல விலை மனுக்கள் தாமதமடையக் கூடியதாகக் காணப்படுகின்றமை காரணமாக, 2018 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டவாறு வருமானத்தை உருவாக்க முடியாதிருந்தமையை 2018.12.20 ஆந் திகதிய கடிதத்தினூடாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்திருந்தது. |
| (ii) | பிராந்திய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்திற்காக முறையே ரூபா 1,140 மில்லியன், ரூபா 211 மில்லியன் மற்றும் ரூபா 300 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது எவ்வித வருமானம் பெறப்படவில்லை. அதற்கமைய, | சாத்தியப்படக் கூடியவாறான வகையில் துல்லியமாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். | மூலதனப் போதுமை பிரச்சினை காரணமாக பிராந்திய அபிவிருத்தி வங்கி மற்றும் அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியிடமிருந்து எவ்வித இலாபங்களினையும் சேகரிக்க முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், தேசிய லொத்தர் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பன கடந்த சில ஆண்டுகளாக விதிப்பனவுக்கு எவ்வித பங்களிப்புக்களினையும் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| **(ஆ)** | **பங்கிலாப வருமானம்** | | |
| (i) | மூன்று அரச உடமையைக் கொண்டுள்ள முயற்சிகளிடமிருந்து பங்கிலாப வருமானம் மதிப்பிடப்பட்டிருக்காத போதிலும், 2018 ஆம் ஆண்டில் அந்த நிறுவனங்களிடமிருந்து ரூபா 53 மில்லியன் வருமானம் பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 200 மில்லியன் மதிப்பிடப்பட்ட லங்கா மினரல் சேண்ட் கம்பனியிடமிருந்து ரூபா 35 மில்லியன் மாத்திரம் பெறப்பட்டமை காரணமாக மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது உள்ளபடியான வருமானத்தில் குறைவு 83 சதவீதமாகக் காணப்பட்டது. | சாத்தியப்படக் கூடியவாறான வகையில் துல்லியமாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். | பங்கிலாப வருமான மதிப்பீடுகளினை தயாரிக்கும் நேரத்தில் நிதி மற்றும் செயற்பாடு தொடர்பான நிலைமைகள் உள்ளடக்கப்பட்டுக் காணப்படாத போதிலும், தொடர்புடைய கம்பனிகளிடமிருந்து பங்கிலாப வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.<br><br>லங்கா மினரல் சேண்ட் கம்பனியின் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருக்காமை காரணமாக வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. சபைக் கூட்டமொன்று நடாத்தப்படும் வரை இடைக்கால பங்கிலாபங்களினை செலுத்துவதற்கு வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட வருடாந்த வருமானத்தில் ரூபா 35 மில்லியன் பங்கிலாப வருமானமொன்று பெறப்பட்டது. |
| (ii) | கடந்த சில ஆண்டுகளாக பங்கிலாப வருமானத்திற்கு எவ்வித பங்களிப்புக் | அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டிய வருமானத்தினைப் பெற்றுக் | கஹட்டகஹ கிரபைட் கம்பனி மற்றும் புஸல்லாவ பிளான்டேசனிஸ் கம்பனி என்பன திறைசேரியில் சிறுபான்மை பங்குதாரர் கம்பனிகளாகக் |

| | | |
|---|---|---|
| களினையும் மேற்கொண்டிராத ஏழு பொது முயற்சிகள், 2018 ஆம் ஆண்டில் உள்ளடக்கப் பட்டிருந்தமை, அவதானிக்கப்பட்டது. | கொள்வதற்கு திணைக்களம் கவனஞ் செலுத்த வேண்டும். | காணப்படுகின்றன. பங்கிலாபம் அறிவிக்கப்படும் போது, திறைசேரி பங்கிலாபங்களினைப் பெற்றுக் கொள்ளும்.<br><br>மாந்தை சோல்ட் கம்பனி கடந்த ஆண்டுகளில் சிறியதொரு தொகையான பங்கிலாபத்தினை அறிவித்திருந்ததுடன் அது செலுத்தப்பட்டிருக்கவில்லை, ஆனால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 33 மில்லியன் இலாபமொன்று பெறப்பட்டிருந்தமை காரணமாக இந்த விடயத்தினைக் கருத்திற்கொள்வதன் மூலம் அடுத்த வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கிலாபத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென நான் அறியத்தருகின்றேன்.<br><br>2018 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய காசுப் பாய்ச்சல் நிலைமை காரணமாக மூன்று தவணைகளில் ரூபா 16 மில்லியன் பிரேரித்த பங்கிலாப வருமானத்தினை வழங்குவதற்கு இலங்கை அரச வியாபார (பொது) கூட்டுத்தாபனம் இணங்கியிருந்த போதிலும், அந்த நேரத்தில் நிறுவனத்தில் காணப்பட்ட திரவத்தன்மை பிரச்சினை காரணமாக 2018 ஆம் ஆண்டிற்கான பங்கிலாப வருமானம் கிடைக்கக் கூடியதாகக் காணப்படாததுடன் இந்த பங்கிலாப வருமானத்தின் பகுதியொன்று 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தது.<br><br>சிலோன் சுகர் கம்பனி 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான பங்கிலாபங்களினை பிரரேரித்திருக்கவில்லை. |
| | நட்டத்திற்கான காரணங்களினை பரீட்சிப்பதற்கு மற்றும் பரிந்துரைகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஸ்கின் டெவலப்மென்ட் பன்ட் லிமிட்டட் தொடர்ந்தும் நிலவும் செயற்பாட்டு நட்டங்கள் காரணமாக பங்கிலாபமொன்றை பிரேரித்திருக்கவில்லை.<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட செயற்பாட்டு நட்டம் காரணமாக பெற்றோலியம் ஸ்டேரேஜ் |

| | | | |
|---|---|---|---|
| | | | டேமினால் கம்பனியிடமிருந்து திறைசேரிக்கு பங்கிலாப வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2017 திசெம்பர் 20 ஆந் திகதிய அரசிறைக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம், சட்ட நடவடிக்கை ஆணைகளிலிருந்து (divestiture proceeds) பெறப்பட்ட வருமானங்களுக்கான கணக்கீட்டு உத்தியோகத்தராக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருந்தார் தனியார் பொது பங்குடமையொன்றாக 2017 யூலை 29 இல் கைச்சாத்திடப்பட்ட நிதியுதவிகள் உடன்படிக்கையின் பிரகாரம், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் குத்தகையிலிருந்து பெறப்பட்ட ரூபா 44,677 மில்லியன் வருமானம் 2017 ஆம் ஆண்டிற்காக கணக்கிடப்பட்டிருக்க வில்லை. அந்த உடன்படிக்கைகளின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 861,560,600 வருமானங்கள் வருமான மதிப்பீடுகள் - 2018 இல் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | மீளமைக்கப்பட்ட வருமான மதிப்பிடுகளினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடுகள் 2017 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதுடன் 2017.12.20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த வருமானக் குறியீட்டின் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட்டிருந்தார். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) மூலதன வாக்குப்பணமொன்றிற்காக எவ்வித மதிப்பீடுகளும் காணப்படாததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டினூடாக வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் ஏற்பாட்டில் 38 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | சாத்தியப்படக் கூடியவாறான வகையில் துல்லியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நிலவிய அரசியல் நிலைமை காரணமாக 2509 - நிகழ்ச்சித்திட்டம் (கண்டுபிடிப்பாளர்களிலிருந்து கைத்தொழிற்துறை முயற்சிகள்) அமுல்படுத்த முடியாதிருந்தது. |
| (ஆ) மீண்டெழும் 06 வாக்குப் பணங்களின் மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 430,140,000 ஆகக் காணப்பட்டதுடன் சேமிப்புக்கள் ரூபா 425,539,201 ஆகக் காணப்பட்டது. சேமிப்புக்களின் சதவீதம் 23 தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | சாத்தியப்படக் கூடியவாறான வகையில் துல்லியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | எதிர்பார்க்கப்பட்டவாறு அலுவலர்களின் கடமைகளினை பகிர்ந்தளிக்காமை மற்றும் அதே மாதத்தின் போது திசெம்பர் மாதத்தின் செலுத்துகை உறுதிச்சீட்டுக்களினை சமர்ப்பிக்காமை, எதிர்பார்க்கப்பட்டவாறு வெளிநாட்டுப் பிரயாணங்களினை மேற்கொள்ளாமை, உத்தியோகத்திர்களின் இடமாற்றம், எதிர்பார்க்கப்பட்டவாறு பராமரிப்பு வேலை மேற்கொள்ளப்படாமை, தேசிய சேமிப்பு வங்கியில் செயற்பாடற்ற கணக்குகளின் மீளளித்தலுக்கான கட்டுநிதியைப் பெறாமை மற்றும் எதிர்பார்க்கப்பட்டவாறு உத்தியோகத்தர்களினால் கடன்கள் பெற்றுக் கொள்ளப்படாமை மற்றும் பல்வேறுபட்ட ஏனைய உத்தியோகத்தர்களின் இடமாற்றம் போன்ற காரணங்கள் காரணமாக ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் இலட்சிய நோக்கும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கையில் பொது முயற்சிகளின் நல்லாளுகையினை உறுதிப்படுத்தும் பொருட்டு உச்ச அமைப்பாகக் காணப்படும் தூரநோக்குடன் செயற்படுத்தப்படுகின்ற பொது முயற்சிகள் திணைக்களம், அவர்களின் மேற்பார்வைகளின் கீழ்க் காணப்படும் அரச உடமையைக் கொண்டுள்ள துணைக் கம்பனிகளின் மேற்பார்வையுடன் தொடர்புடைய வகிபாகம் மற்றும் பொறுப்புக்களினை இணங்கண்டிருந்தமை உறுதிப்படுத்தியிருக்கவில்லை. | தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கின் பிரகாரம் மேற்பார்வைக்கான பொறுப்பு முறையாக இணங்காணப்படல் வேண்டும். | பொது முயற்சிகள் திணைக்களத்தின் கீழ்க் காணப்படும் துணைக்கம்பனிகளின் மேற்பார்வை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்களின் பொறுப்புக்கள், தொழிற்பாடுகள் மற்றும் அளவிடை விதிகளினை இனங்காண்பதற்கு உடனடி நடவடிக்கைகளினை நான் எடுப்பேன். இதற்கான முறைமையொன்றை தயாரிக்க மற்றும் நிதி அமைச்சின் ஏனைய திணைக்களங்களிலிருந்து அதிகாரிகளினைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும். |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைந்துகொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பொது முயற்சிகளின் செயற்பாடு நடவடிக்கைகளினை வலுப்படுத்துவதன் மூலம் நல்லாளுகையினை மேம்படுத்தும் நோக்கொன்றுடன் பொது முயற்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கையேடுகளினை மீளாய்வு செய்து அங்கீகரிப்பது திணைக்களத்தின் செயற்பாடொன்றாகக் காணப்பட்ட போதிலும், அந்த வேலை மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | செயற்பாட்டு நடவடிக்கை களினை வலுப்படுத்துவதற்கு கையேடுகளினை அங்கீகரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்ட கையேடுகளினை மீளாய்வு செய்து அங்கீகரிப்பது சிக்கல்தன்மை வாய்ந்த பணியொன்றாகக் காணப்படுகின்றமையினை நான் அவதானித்தேன். ஆகையினால் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட கையேடுகளினை அங்கீகரிப்பதற்கு மற்றும் பொருத்தமானதொரு பொறிமுறையினை தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது முயற்சிகளின் செயலாற்றலினை கண்காணிக்கும் நோக்கொன்றுடன் அவர்களின் கூட்டிணைந்த திட்டங்கள், செயல் நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் வருடாந்தப் பாதீடு 2018 என்பவற்றை மீளாய்வு செய்வதுடன் தேவையானவிடத்து சரிப்படுத்தல்கள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பான திட்டங்களினை வழங்குவது செயற்பாடொன்றாகக் காட்டப்பட்டிருந்தது. 2018 இல் மீளாய்வுக்காக 100 திட்டங்கள் மற்றும் பாதீடுகள் காணப்பட்ட போதிலும், நூறில் அரைவாசிக்கு மாத்திரம் மீளாய்வு செயற்பாடுகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. | கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், வருடாந்தப் பாதீடு என்பவற்றை மீளாய்வு செய்வதன் மூலம் அமைப்புக்களின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை முன்னேற்றுவதற்கு மற்றும் பரிந்துரைகளினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கூட்டிணைந்த திட்டங்கள், செயல்நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் வருடாந்தப் பாதீடு 2018 என்பவற்றை மீளாய்வு செய்வதில் தாமதமொன்று காணப்பட்டிருந்த போதிலும், ஏனைய கடமைகளுடன் நியமிக்கப்பட்டவற்றுடன் நடாத்திச் செல்வதற்காக இதுவரை பெறப்பட்டுள்ளதுடன், மீதமாகவுள்ள அறிக்கைகள் இதுவரை தற்போது மீளாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. |
| (இ) | பொன்னான (Golden) பங்குதாரர் கூட்டங்களினை நடாத்துவது திணைக்களத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒரு பணியொன்றாகக் காணப்பட்ட போதிலும், அந்த கூட்டங்கள் 2018 இல் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | முன்மொழியப்பட்ட வாறு கூட்டங்களினை நடாத்துவதன் மூலம் நிறுவனங்களின் செயலாற்றலினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொன்னான பங்குதாரர்களாக பிளான்டேசன் கம்பனியொன்றின் உயர் முகாமைத்துவத்துடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், பொன்னான பங்குதாரர்களுக்கான கூட்டமொன்றை நடாத்துவதற்கு வேண்டப்பட்ட பிராந்திரய பிளான்டேசன் கம்பனிகளின் செயலாற்றல் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிளான்டேசன் முகாமைத்துவ மேற்பார்வை பிரிவு வேண்டிக்கொண்டிருந்தது. |

### 3.3. முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகளின் செயற்பாட்டு மற்றும் நிதி நடவடிக்கைகளுக்கான அதிகாசபையாக பணிப்பாளர் சபை காணப்படுகின்றதுடன் 2018 ஆம் ஆண்டில் 08 பொது முயற்சிகளில் குறிப்பிடத்தக்க காலப்பகுதியொன்று நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை காணப்படாமையினால், அந்த நிறுவனங்களின் செயலாற்றலினை பாதகமாக தாக்கமளிக்கக் கூடியதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. பணிப்பாளர் சபையினை நியமிக்கும் செயற்பாடுகள் நிதி அமைச்சினால் செய்யப்பட்ட போதிலும், பொது முயற்சிகள் திணைக்களம், அரசாங்க முயற்சிகளினை மேற்பார்வை செய்யும் முகவராக பொறுப்புக்களினை போதுமானளவு நிறைவேற்றியிருந்தா என்பதை உறுதிப்படுத்த முடியாது காணப்பட்டது. | பொது முயற்சிகளின் நல்லாளுகைக்காக சாத்தியப்படக் கூடியவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொது முயற்சிகளுக்கான பணிப்பாளர் சபையொன்றை நியமிக்கும் செயன்முறையில் பொது முயற்சிகள் திணைக்களம் காணப்படாததுடன் நிதி அமைச்சினால் அது மேற்கொள்ளப்படுகின்றமை இங்கு குறிப்பிடப்படுகின்றது. |

### 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க முகவர்களும் செயற்பட வேண்டியதுடன் திணைக்களம் அதனை அறிந்திருந்தது. ஆனால் இலக்குகளினால் அடைந்துகொள்ளப்பட வேண்டிய, மற்றும் செயலாற்றலினை அளவிடுவதற்கு தேவைப்படுகின்ற குறிகாட்டிகள் தொடர்பான இலக்குகள், அடிப்படைத் தரவு, மயிற்கற்கலினை இணங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அனைத்து அரசாங்க முகவர்களும் செயற்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திக்கான ‘‘2030 நிகழ்ச்சி நிரல்’’ தொடர்பில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களினை உருவாக்குவதற்கு மற்றும் எதிர்காலத்தில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் இலக்குகளினை இனங்காண்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 79 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணியினர் 70 ஆகக் காணப்பட்டமையினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது, சிரேஷ்ட மட்டத்தில் 05 வெற்றிடங்களினையும், மூன்றாம் மட்டத்தில் 02 வெற்றிடங்களினையும் மற்றும் இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 01 வெற்றிடத்தினையும் கொண்டிருந்தது. | வெற்றிடங்களினை நிரப்புவதற்கு அல்லது அவசியமற்றதாகக் காணப்படின், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிதி அமைச்சிற்கு காலத்திற்குக் காலம் வேண்டுகோள்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. |